2020 மார்ச் 18]

செய்திருக்கிற ஒரு மிகப் பெரிய உதவியாகும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய நெசவாளர் பெருமக்களுக்குச் சொல்லி, அந்த ஏற்பாட்டைச் செய்துகொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

121—

கட்டடம்

***12159—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலேயே கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்குக்கான கட்டடங்களைக் கட்டுவது அரசின் பரிசீலனையில் இல்லை. கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்காக நாமக்கல் மாவட்டம், எர்ணாபுரத்திலுள்ள புல எண் 47/2B–ல், 85 சென்ட் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான கட்டடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது அனுமதியுடன் ரூ.2 கோடியே 25 இலட்சம் செலவில் கட்டப்படும் என 2020–2021 ஆம் ஆண்டிற்கான கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக்

கோரிக்கையின் புதிய அறிவிப்புகளில் வெளியிடப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். நாட்டிலேயே அனைத்துத் துறைகளிலும் முதலிடம், சட்டம்–ஒழுங்கிலும் முதலிடம் என்று சிறப்பான ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, அவர்களுக்கு உற்ற துணையாக இருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், எங்கள் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் நாமக்கல் மாவட்ட மக்களுக்கு கேட்டவுடனேயே வழங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, நாமக்கல்லில் ஒருங்கிணைந்த மண்டல இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காக நேற்று நடைபெற்ற விவாதத்தில் கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.2.25 கோடி நிதி ஒதுக்கீட்டை செய்துள்ளது. அது மட்டுமல்லாமல், நாமக்கல் மாவட்டத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கருப்பு வெள்ளாட்டின பண்ணை அமைக்க 1.48 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.1.49 கோடி செலவில் புதிய தீவனப் பயிர்கள் ஆராய்ச்சி மேற்கொள்ள, 25 ஏக்கர் நிலப்பரப்பில் தீவன விதைகள் உற்பத்திப் பிரிவு ஏற்படுத்த நிதி உதவியும் செய்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நாமக்கல் மாவட்டத்தின் சார்பாகவும், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களிடம் துறை சார்ந்த கேள்வி ஒன்று கேட்க விரும்புகிறேன். கடந்த 3 வாரங்களாக Corona virus பற்றிய தவறான திசை திருப்பும்

2020 மார்ச் 18]

சில விஷமச் செய்தி மற்றும் பிரச்சாரங்களால் எங்கள் கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்ற கோழி முட்டைகள் மற்றும் கோழிக் கறி விலை குறைந்து, கோழி முட்டை ஒன்று 1.50 பைசாவிற்கும், கோழிக் கறி ஒரு கிலோ 15 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இவற்றின் விலை அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது. அடுத்து தாங்கள் செய்துவரும் தொழிலில் என்ன செய்வதென்று திக்குத் தெரியாமல் கோழிப் பண்ணையாளர்கள் மிகுந்த வேதனையில் இருக்கிறார்கள். கோழிப் பண்ணையாளர்களின் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவிற்கு நஷ்டத்தை இந்த Corona virus பீதியால் அவர்கள் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் கோழி வளர்ப்புத் தொழில் மற்றும் இதை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. இந்த அழிவின் விளிம்பிலிருந்து எங்கள் கோழி வளர்ப்புத் தொழிலையும், அவற்றை நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களையும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, இன்றைக்கு Corona virus மூலமாக நாமக்கல் பகுதியிலிருக்கின்ற பல கோடி கோழி முட்டைகள் தேக்கத்தில் இருப்பதாகவும், அதன் மூலமாக கோழிப் பண்ணையாளர்களுக்கு மிகுந்த நஷ்டம் உருவாகியிருப்பதாகவும் சொன்னார்கள். ஏற்கெனவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், என்னிடத்திலேயும் கோழிப் பண்ணை உரிமையாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது, அதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆய்வு செய்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதேபோல Corona virus–ஐ பொறுத்தவரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகவே பதில் சொல்லிவிட்டார்கள். கோழிகளிலிருந்து Corona virus பரவுவதில்லை என்கிற விழிப்புணர்வை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பலமுறை

[2020 மார்ச் 18

சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, நாமக்கல் பகுதியிலிருக்கின்ற கோழி முட்டைகளானாலும் சரி, கறி கோழிகளானாலும் சரி, சாப்பிடுபவர்கள் யாருக்கும் இதுபோன்ற நோய்கள் வருவதில்லை என்பது சுகாதாரத் துறையினுடைய ஆய்வின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அச்சப்படத் தேவையில்லை என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டிருக்கின்றது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

ஆரம்ப சுகாதார நிலையம்

***54007—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, திருமுட்டம் ஒன்றியம், காவனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,